2012 மே 9]

ஒன்றியம், நான்கு பேரூராட்சிகளையும், 27 சிற்றூராட்சிகளையும் உள்ளடக்கிய, 1 இலட்சத்து 65 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட பகுதி. இந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க, அரசு இந்தப் பகுதியிலே போக்குவரத்துப் பணிமனை அமைக்கும் என்பதை அறிவித்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்று மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை உள்ளது. (குறுக்கீடுகள்) இரண்டு அமைச்சர்களின் மானியக் கோரிக்கைகள் உள்ளன. (குறுக்கீடுகள்) தயவு செய்து நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் பெட்ரோல் குண்டு வீசியவர்கள் மீது . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அதுகுறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.* It is under my examination. Please sit down. *(குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன.* Please sit down.